# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 07 செவ்வாய்க்கிழமை | 23.07.2024 | கதிர் 309











# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ் முற்றவெளியில் கறுப்பு ஜூலை நினைவேந்தல் இன்று மக்களால் அனுஷ்டிக்கப்பட்டது!

## இன அழிப்பை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரிக்க வேண்டும் என வலியுறுத்தல்

**கறுப்பு ஜூலை நினைவேந்தல் யாழில் இன்று மாலை அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது, கறுப்பு நிலையில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.**

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ் முற்றவெளி மைதானம் முன்பாக இன்று மாலை இந்த நினைவேந்தல் நடைபெற்றது. இதன்போது நினைவேந்தல் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு ஏனையவர்களும் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.**



## கறுப்பு ஜூலை தினமான இன்று நீதி கோரி உறவுகள் போராட்டம்

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கறுப்பு ஜூலை தினமான இன்று கவனயீர்ப்புப் போராட்டத்தை யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்தனர்.

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் யாழ். மாவட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். பிரதான வீதியிலுள்ள கலைத்தூது மண்டபத்துக்கு முன்பாக இன்று மதியம் இந்தப் போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்தனர்.

2➤

## கடனை பெற்றுவிட்டு பெருமை பேசுவதில் அர்த்தமில்லை மக்களின் நலனுக்காக அவை முதலீடு செய்யப்பட வேண்டும்

### மக்களுக்கு நாங்கள் தீங்கு செய்ததில்லை என்கிறார் நாமல் எம்.பி.



“வொக்ஸ்வேகன் நிறுவனங்களிலும், பாரிய தொழிற்சாலைகளிலும் ஆயிரக்கணக்கான வேலை வாய்ப்புகள் வழங்குதல் என்ற பொய் வாக்குறுதிகள் மட்டுமன்றி, உள்ளூர் வளங்களை சூறையாடுவது, தொழிலாளர்கள், மீனவர்கள் மற்றும் விவசாயிகள் மீது வரிச்சுமை ஏற்றல் போன்றவற்றுக்கும் நாம் எதிரானவர்கள்” என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பிங்கிரிய தேர்தல் தொகுதி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். பிங்கிரிய பிரதான பேருந்து நிலையத்தில் நடைபெற்ற மேற்படி மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு

2➤

## கிளிநொச்சியில் கறுப்பு ஜூலை நினைவேந்தல்!



கறுப்பு ஜூலைப் படுகொலையின் 41 ஆவது ஆண்டு நினைவேந்தல், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில், கட்சியின் மாவட்டப் பணிமனையான அறிவகத்தில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

கரைச்சிப் பிரதேச சபையின் மேனாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில், தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன், வடக்கு மாகாணசபையின

2➤

## 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைக்காது

### ஜனாதிபதி தேர்தல் நடந்தே தீரும் என்கிறார் விஜித ஹேரத் எம்.பி.



22 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் குறித்து குழப்பமடைய தேவையில்லை எனவும், அது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படாது, அதன்படி சர்வஜன வாக்கெடுப்பும் நடத்த வேண்டிய தேவை ஏற்படாது என தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று உறுப்பினர் விஜித ஹேரத் மஸ்கெலியவில் தெரிவித்தார்.

மஸ்கெலியா பி.எம். டி. மண்டபத்தில் இடம்பெற்ற மலையக மக்கள் சபையின் கூட்டமொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கும்போது, “இன்றைய நிலையில் அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரம் கிடையாது. 22 ஐ நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தாலும் அதனை நிறைவேற்ற முடியாது. அதாவது, சர்வஜன வாக்கெடுப்பு நடக்காது. அவர்களின் முயற்சி பலிக்காது. எனவே, இந்த விடயத்தில் எந்தவொரு குழப்பமும் இருக்கக் கூடாது. அடுத்த வாரம் ஜனாதிபதி தேர்தல் திகதி மற்றும் வேட்புமனு தாக்கல் திகதியை தேர்தல் ஆணைக்குழு அறிவிக்கும். அதற்கமைய ஜனாதிபதித் தேர்தல் திட்டமிட்டபடி நிச்சயம் நடைபெறும். இவர்களின் தந்திரங்கள் எதுவும் பலிக்காது” - என்றார்.

2➤

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேனாள் கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா, எழுத்தாளரும் ஆசிரியருமான தீபச்செல்வன் ஆகியோர் நினைவுரைகளை ஆற்றியிருந்தனர்.

கட்சியின் செயல்நிலை உறுப்பினர்கள் பலரது பங்கேற்புடன் நடைபெற்ற இந் நினைவேந்தலின் போது, அண்மையில் மறைந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பெருந்தலைவர் இரா.சம்பந்தன் அவர்களுக்கும், தமிழீழ இராணுவ இயக்கத்தின் தலைவரும், ஈழப்போராட்டத்தின் முன்னோடிகளுள் ஒருவருமான தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் (பனாகொட மகேஸ்வரன்) அவர்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டிருந்தது. (02)

## கறுப்பபு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காணாமல் ஆக்கப்பட்டோரை மீட்டுத் தரக் கோரி வடக்கு, கிழக்கில் உள்ள ஒவ்வொரு மாவட்டங்களிலும் சுழற்சி முறையில் மேற்படி சங்கத்தினர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இதற்கமைய இன்று யாழ்ப்பாணத்தில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, “உறவுகள் எங்கே, நீதி வேண்டும், சர்வதேசமே கண்ணைத் திறந்து பார், உறவுகள் நீதி கோருகின்றபோது அரசே நிதியை வழங்கி ஏமாற்றாதே, எங்கள் உறவுகளுக்குப் பதில் கூறு” உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை அவர்கள் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், கறுப்பு ஜூலை தினமான இன்று கறுப்பு ஜூலைக் கலவரத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கும் நீதி வழங்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் யாழ். மாவட்ட சங்கத்துக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இன்று நடைபெற்றது. இதற்கமைய முன்னர் இருந்த சங்கத் தலைவி பூங்கோதை தலைமையிலான நிர்வாகமே மீண்டும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

## தமிழ்தேசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்நிகழ்வில் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் தீபன் திலீசன், மகளிர் அணித் தலைவி வாசுகி சுதாகரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

ஈழத் தமிழர்கள் மீதான சிறிலங்கா அரசின் இனப்படுகொலைக்கு நீதி வேண்டும் என்றும், 1983 கறுப்பு ஜூலை தமிழினப் படுகொலையானது சிறிலங்கா அரசாங்கத்தினால் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டது என்பதும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட 53 தமிழ் அரசியல் கைதிகளையும் நாடு முழுவதும் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களையும் நினைவு கூருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

1948 முதல்இன்றுவரை நடைபெற்ற நடைபெறுகின்ற இன அழிப்பை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. (01)

## 22ஆவது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நிர்வாக உறுப்பினர் கலாநிதி பி. பி. சிவப்பிரகாசம், தேசிய மக்கள் சக்தியின் தேசிய செயற்குழு உறுப்பினர் மஞ்சுள சுரவீரஆராச்சி, தேசிய செயற்குழு உறுப்பினர் கிருஷ்ணன் கலைச் செல்வி மற்றும் பெருமளவு மக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ரெஜ-56)

## கடனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உரையாற்றிய நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தபோது, “கப்பலை உருவாக்கி நங்கூரமிட்டு ஓர் ஓரமாக நிறுத்தி வைத்தால் அதற்கு எந்த ஆபத்தும் இருக்காது, ஆனால் அந்த கப்பலை கடலில் செலுத்தும் போது புயல் மற்றும் பாரிய அலைகள் போன்றவற்றை அது எதிர்கொள்ள வேண்டியிருக்கும். எங்கள் கட்சிக்கும் அதே நிலைதான். இந்த சவால்களை நாமும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இந்த அரசியலில் முடிவெடுப்பது எளிதல்ல அது மிகவும் கடினமானது, ஆனால் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் சரியான முடிவாக இருக்க வேண்டும்.

பெரும்பாலான அரசாங்கங்கள் கடனில் இயங்குகின்றன. ஆனால் இந்தக் கடனைப் பற்றி பெருமையாகப் பேசுவதில் அர்த்தமில்லை. நாட்டின் நலனுக்காகவும், மக்களின் நலனுக்காகவும் அவை முறையாக முதலீடு செய்யப்பட வேண்டும். நமது காலத்தில் எடுத்த ஒவ்வொரு டொலருக்கும் மதிப்பை கொடுத்திருந்தோம். அவை இந்த நிலம் உணரும் வகையில் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

நாங்களும் சில பிழைகளை செய்திருக்கலாம். ஆனால், இந்த நாட்டுக்கும், மக்களுக்கும், மதத்துக்கும் நாம் எந்தவொரு பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. நாம் எடுத்த ஒவ்வொரு தீர்மானங்களும் இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கான தீர்மானங்களாக இருந்தனவே தவிர, தனி நபர்களின் நலன் சார்ந்தவையாக அவை இருக்கவில்லை” - என்றார். (ரெஜ-57)

# ஏ – 9 வீதியில் பலத்த காயங்களுடன் ஆணொருவரின் சடலம் இன்று மீட்பு

*கண்டி - யாழ்ப்பாணம் ஏ - 9 வீதியில் பலத்த காயங்களுடன் ஆணொருவர் இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.*

*சடலமாக மீட்கப்பட்டவர் மெல்சிரிபுர பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் பணியாற்றி வரும் நிலையில், தனது பணியை முடித்து விட்டு மீண்டும் வீடு நோக்கிச் சென்றுக்கொண்டிருக்கும் போது விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார் என்று திறப்பனை பொலிஸார் தெரிவித்தனர்.*

*அநுராதபுரம், மிஹிந்தலை பகுதியில் வசிக்கும் 38 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே விபத்தில் உயிரிழந்துள்ளார்.*

*இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)*

# செப்டெம்பர் 21 இல் ஜனாதிபதித் தேர்தலா?

ஜனாதிபதித் தேர்தல் செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெறக்கூடும் எனவும், எதிர்வரும் ஆகஸ்ட் 15 முதல் 20 ஆம் திகதி வரை வேட்புமனுக்கள் ஏற்கப்படும் எனவும் தெரியவருகின்றது.

தேர்தல் திகதி மற்றும் வேட்புமனு ஏற்கப்படும் திகதி உள்ளிட்ட தகவல்கள் எதிர்வரும் 24 அல்லது 25 ஆம் திகதிகளில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணைக்குழு முன்னெடுத்து வருகின்றது எனவும் அறிய முடிகின்றது. (05)

# கொரோனாக் காலக் கட்டாய உடல் தகனம் மன்னிப்புக்கோர அமைச்சரவை அங்கீகாரம்!

*கொரோனா தொற்றும் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட கட்டாய உடற் தகனக் கொள்கையினால் பாதிக்கப்பட்டவர்களிடம் அரசாங்கம் மன்னிப்பு கோருவது தொடர்பான யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.*

*நிலத்தடி நீருக்குப் பாதிப்பு ஏற்படும் எனத் தெரிவித்து, கொவிட் -19 தொற்றினால் இறந்தவர்களின் உடல்கள் கட்டாயத் தகனம் செய்ய வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.*

*இதன்படி, 276 இஸ்லாமியர்களின் உடல்கள் தகனம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.*

*அதன்பின்னர், நடத்தப்பட்ட ஆய்வில் அவ்வாறு கொவிட்-19 தொற்று உறுதியான நிலையில் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்வதால் நிலத்தடி நீருக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது எனக் கண்டறியப்பட்டது.*

*இந்த நிலையில், பாதிக்கப்பட்ட சமூகத்திடம் அரசாங்கம் மன்னிப்பு கோருவதற்காக, நீதி, சிறைச்சாலை அலுவல்கள், அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ஆகியோர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (04)*




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# திருக்கேதீஸ்வரத்தில் இரு பாடசாலைகளுக்கு இணைந்த கரங்களால் கற்றல் உபகரணங்கள்

(வி.ரி.சகாதேவராஜா)

மன்னார் மாவட்டத்திலுள்ள திருக்கேதீஸ்வரம் இந்து சமய தமிழ் கலவன் பாடசாலை மற்றும் மினுக்கன் அரசினர் முஸ்லீம் பாடசாலை ஆகிய இரு பாடசாலைகளின் வறிய மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் அமைப்பினால் கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் வழங்கி வைக்கப்பட்டன. இப்பாடசாலைகள் கடந்த காலங்களில் யுத்ததித்தினால் பாதிப்படைந்த பாடசாலைகளாகும்.

இந்நிகழ்வு பாடசாலையின் அதிபர் பி.சே.தட்குருஸ் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

“ஏழ்மையை ஒழிப்போம் கல்வியை விதைப்போம்” எனும் தொனிப்பொருளில் இணைந்த கரங்கள் அமைப்பானது மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை பல கஸ்ர பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு கடந்த இரண்டு வருடங்களாக வழங்கிவருகின்றது .

இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட வலயக் கல்வி அலுவலகத்தில் ஆசிரிய வாண்மை விருத்தி முகாமையாளர் சோமஸ் பெரேறா , இரு பாடசாலையின் ஆசிரியர்கள், இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான காந்தன், சுரேஸ் விவேக், ஆனந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.







## கலாசாலையில் ஆடிப்பிறப்பு விழா

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கவின்கலை மன்றத்தினர் முன்னெடுக்கும் ஆடிப்பிறப்பு விழா நாளை காலை 8.30 மணிக்கு கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் லாகினி நிருபராஜ் கலந்துகொள்வார்.

கடந்த வாரம் கலாசாலையின் ஆசிரிய மாணவர்களுக்கான கற்பித்தல்பயிற்சி இடம்பெற்று இந்த வாரம் கலாசாலைக்கு மீளவும் ஆசிரிய மாணவர்கள் வருகை தந்த சூழலில் ஆடிப்பிறப்பு விழா முன்னெடுக்கப்படுவதாகக் கலாசாலை அதிபர் குறிப்பிட்டார்.







## திருக்கோவிலில் வெள்ளி தோறும் என்பு முறிவு கிளினிக் ஆரம்பம்

(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் என்பு முறிவு கிளினிக் நடாத்தப்படவுள்ளது.

கல்முனை ஆதார வைத்தியசாலையில் பணியாற்றும் என்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர் எஸ்.கலாவேந்தன், வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினரும்நிருவாகமும்கேட்டுக்கொண்டதற்கிணங்க இக்கிளினிக்கை நடாத்த முன்வந்துள்ளார்.

அதன் முதலாவது கிளினிக் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

அக்கரைப்பற்று தொடக்கம்பொத்துவில்வரையிலான பெருநிலப்பரப்பில் வாழும் மக்களின் நன்மை கருதி திருக்கோவில் ஆதார வைத்திய சாலையில் என்பு முறிவு கிளினிக் ஆரம்பித்து வைக்க உள்ளார்,

இதன்மூலம், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நோயாளிகள் சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும் என்பதை, திருக்கோவில் பிரதேச பொது மக்களுக்கு வைத்தியசாலை நிருவாகம் அறிவித்துள்ளது.

# ஜனாதிபதியின் தலைமையிலான பட்டறை எனும் பெயரில் சமூக பொலிஸ் ஆலோசனை குழு தேர்தல் பிரச்சாரத்தில்?

## ஐ.ம. சக்தியின் மத்துமபண்டார தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு



ஜனாதிபதியின் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கு எனும்பெயரில், சூட்சுமமாக மாவட்ட மட்டத்தில் தேர்தல் பிரசார நிகழ்ச்சிகளை சமூக பொலிஸ் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் ஏற்பாடு செய்து வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் மத்துமபண்டார தேர்தல் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

மாவட்ட அளவில் ஏற்பாடு செய்யப்படுகின்ற இந்த நிகழ்வுகள் எதிர்வரும் நாட்களில் நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களிலும் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஏ.எல். ரத்நாயக்கவிடம் இது குறித்து எழுத்து மூலமான முறைபாட்டை கையளித்துள்ளனர். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திம வீரக்கொடி மற்றும் முஜிபர் ரஹ்மான் ஆகியோரும் உடனிருந்தனர். (ரெஜ-58)

# ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட முற்பட்டால் பங்களாதேஷ் நிலையே இலங்கையில் ஏற்படும்

## சன்ன ஜயசுமன எம்.பி. எச்சரிக்கை



ஜனாதிபதித் தேர்தல் ஏதேனுமொரு வழியில் பிற்போடப்படுமானால் இன்று பங்களாதேஷில் நடப்பதுதான் நாளை இலங்கையிலும் நடக்கும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

"ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்குப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. எனினும், அவை கைகூடவில்லை. அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்தால்கூட தேர்தல் ஒத்திவைப்பதற்குரிய சாத்தியம் குறைவு.

அரசமைப்பின் பிரகாரம் ஒக்டோபர் 16 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும், அதற்காக இறுதி வரை காத்திருக்க முடியாது. மீள் வாக்கெடுப்பை நடத்த வேண்டிய தேவை ஏற்படின் இரு வாரங்கள் அவசியம். எனவே, ஒக்டோபர் 2 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும். அந்தவகையில் செப்டெம்பர் 21 அல்லது 28 இல் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும். அவ்வாறு அல்லாமல் வேறு ஏதேனும் வழியில் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முயற்சி எடுக்கப்பட்டால் பங்களாதேஷில் இன்று நடப்பது, நாளை இலங்கையில் நடக்கலாம்" – என்றார். (05)




## ரணிலை ஜனாதிபதியாக்கியே தீருவோம்
## மஹிந்தவின் சகா லொஹான் ரத்வத்த சபதம்



"நான் மஹிந்த ராஜபக்ஷவின் வலது கை என்ற போதிலும் நாட்டின் நலன் கருதி ஜனாதிபதி ரணில் பக்கம் தற்போது நிற்கின்றேன். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் அவருக்கே வாக்களிப்பேன்." – என்று இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

"பண்டாரநாயக்க எனது மாமா, சிறிமா எனது அத்தை, சந்திரிகா எனது அக்கா, ஜெனரல் ரத்வத்த எனது தந்தை. இவ்வாறு அரசியல் பின்னணி கொண்ட குடும்பத்தில் இருந்தே நான் அரசியலுக்கு வந்துள்ளேன்.

எனவே, ஜே.வி.பியினரின் மிரட்டல்களுக்கு அஞ்சமாட்டோம். பேய்களுக்கு பயமெனில் சுடுகாட்டில் வீடு கட்டமாட்டோம் என்பதை அநுரகுமார திஸ ாநாயக்கவுக்குக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

ரணிலுக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் வாக்களிக்கும்போது கை நடுங்கியது. ஆனால், அந்த முடிவு சரியென்பது இன்று உறுதியாகியுள்ளது. அது மகிழ்ச்சியளிக்கின்றது. எனவே, அடுத்த தேர்தலிலும் நான் ரணில் பக்கம்தான் நிற்பேன். ரணிலை ஜனாதிபதியாக்கியே தீருவோம்" – என்றார். (05)

# சாய்ந்தமருது அல்–ஹிலால் வித்தியாலய கட்டிடம் பட்மின்டன் பயிற்சி நிலையம் அடிக்கல் நாட்டல்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது அல் - ஹிலால் வித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ள புதிய மூன்று மாடி வகுப்பறைக் கட்டிடம் மற்றும் பட்மின்டன் பயிற்சி நிலையம் ஆகியவற்றுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று இடம்பெற்றது.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் முயற்சியினால் நாடாளுமன்ற உறுப்பினரின் டி-100 வேலைத்திட்டத்தின் கீழ் இந்த நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வித்தியாலயத்தின் அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் பிரதம அதிதியாகக் கலந்து அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், அம்பாறை மாவட்டப் பொறியியலாளர் ஏ. எம். சாஹிர், கல்முனை வலயக்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான யூ.எல். றியால், எம்.எம். முதர்றிஸ், அஸ்மா மலிக் ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் அதிபர் எம்.ஐ. ஜாபிர், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ.வாவா, பாடசாலையின் அபிவிருத்தி சங்க செயலாளர் பொறியியலாளர் கமால் நிஷாத் உட்பட அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் சங்கத்தினர், ஆசிரிய, ஆசிரியைகள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## பாடசாலைச் சேவை வழங்கும் முச்சக்கர வண்டிகள் சாரதிகள் கூட்டுறவுச் சங்க இலச்சினை அறிமுகம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது பிரதேச பாடசாலைச் சேவை வழங்கும் முச்சக்கர வண்டிச் சாரதிகள் கூட்டுறவுச் சங்கம் தமது அங்கத்தவர்களுக்கு அதன் புதிய இலச்சினையை அறிமுகம் செய்துள்ளது.

அத்துடன், அந்த இலச்சினை பொறித்த ஸ்டிக்கர்களை அங்கத்தவர்களின் முச்சக்கர வண்டிகளில் ஒட்டும் நிகழ்வு சாய்ந்தமருது பீச் பார்க் சதுக்கத்தில் நேற்று (22) நடைபெற்றது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

## ஏறாவூர் ஆதார வைத்தியசாலை விஸ்தரிப்பு கிழக்கு மாகாண ஆளுநரால் திறந்து வைப்பு



(எம்.எம்.ஜெஸ்மின்)

சீன நாட்டு அரசாங்கத்தின் நிதியுதவியுடன் ஏறாவூர் ஆதார வைத்தியசாலைக்கென பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டு வரும் கட்டடத் தொகுதியின் முதற்கட்டம் முடிவுற்ற பகுதியினை கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானாவின் வேண்டுகோளின் பேரில் இக்கட்டத்தினை நிருமாணிப்பதற்கென கடந்த நல்லாட்சி காலத்தில் 450 மில்லியன் ஷரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நவீன வசதிகள் கொண்ட சத்திர சிகிச்சைக்கூடம், இரத்த வங்கி, அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் மருத்துவ விடுதி போன்ற வசதிகள் இக்கட்டடத்தில் உள்ளடக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏறாவூர் ஆதார வைத்தியசாலையின் அத்தியட்சகர் வருண சம்பத் பண்டார தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானா, மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் என். சிவலிங்கம், மாகாண பணிப்பாளர் டாக்டர் டிஜிஎம். கொஸ்தா, பிராந்தியப் பணிப்பாளர் டாக்டர் ஆர். முரலீஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# வேட்பாளர்களின் செலவுகள் தொடர்பான ஒழுங்குபடுத்தலை கடுமையாக செயற்படுத்த தேர்தல் ஆணைக்குழு தீர்மானிப்பு

ஜனாதிபதி வேட்பாளர்களின் செலவுகள் தொடர்பான ஒழுங்குபடுத்தல் முறையினை கடுமையாக நடைமுறைப்படுத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறை சட்டத்தின்படி, ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கான செலவுகளை தேர்தல் ஆணைக்குழு தீர்மானிக்கும்.

இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் மற்றும் பல திணைக்களங்களுடன் தேர்தல் ஆணைக்குழு மேற்கொண்ட நீண்ட கலந்துரையாடலின் பின்னர் இது தொடர்பாக இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்துவது குறித்து அனைத்து அரச அதிகாரிகளுக்கும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளதோடு, விதிக்கப்படும் செலவு வரம்பை மீறும் வேட்பாளர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். இதன்படி இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் அவர்கள் மீது வழக்கு தொடரப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வேட்பாளர் எவ்வளவு செலவு செய்ய முடியும் என்பதை வேட்பு மனு தாக்கல் செய்த 5 நாட்களுக்குள் தேர்தல் ஆணைக்குழு அறிவிக்கும். தேர்தல் ஒழுங்குமுறை சட்டம் முதன்முறையாக இந்த ஜனாதிபதி தேர்தலின் போதே அமுல்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ரெஜ-54)




# நெல்சன் மண்டேலா நினைவுதின சிறுவர் கட்டுரை – சித்திரப் போட்டி




ஐக்கிய நாடுகள் சபையால் நொவம்பர் 2009 இல் அறிவிக்கப்பட்ட சர்வதேச நெல்சன் மண்டேலா தினம் ஜூலை 18 அன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதனையொட்டி கொழும்பு சிறுவர் நூலக சங்கம் பாடசாலை மாணவர்கள் மாத்திரம் பங்குபற்றக் கூடிய கட்டுரை மற்றும் சித்திரப் போட்டியொன்றை நடத்த ஏற்பாடுகளை செய்துள்ளது.

இப்போட்டியில் பங்கேற்க விரும்புவோர் 0718153788 அல்லது 0112686878 என்ற எண்ணிற்கு அழைத்து அல்லது Colombo Children Book Society என்ற முகநூல் பக்கத்தினூடாக மேலதிக விபரங்களை பெறலாம். ஆக்கங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி ஜூலை 31 ஆகும்.

(ரெஜ-56)

# என்ன நடந்தாலும் ஜனாதிபதித் தேர்தல் நடந்தே தீரும்! அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தர்க்க ரீதியில் தெரிவிப்பு



என்ன நடந்தாலும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் முறையாக எல்லாமே தீர்மானிக்கப்பட்டு சரியாக நிறைவேறும் என அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

22 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் ஜனாதிபதியினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள போதிலும், ஜூலை 26 ஆம் திகதிக்கு பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அமைச்சர் தெரிவித்துள்ளார். அதனை தன் மூலமே நாடாளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும் எனவும், எனினும் தன்னைத் தவிர பிரதமரோ அல்லது சபைத் தலைவரோ அதனை நாடாளுமன்றத்தில் முன்வைக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், அதற்கு எதிராக எந்தவொரு நபரோ அல்லது குழுவோ உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று தீர்ப்பொன்றை பெறுவதற்கு ஒகஸ்ட் 31 ஆம் திகதி வரை செல்லும் எனவும் அதற்குள் தேர்தல் ஆணைக்குழு வேட்புமனுக்களை கோரியிருக்கும் எனவும் தெரிவித்தார். எனவே, 22 ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதால் ஜனாதிபதி தேர்தலுக்கு பாதிப்பு ஏற்படாது எனவும் அது நிச்சயமாக நடத்தப்படும் எனவும் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

(ரெஜ-55)






# தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடு, காணி வழங்கியே தீருவேன்

## சஜித் சத்தியம்

“எமது நாட்டில் 200 வருடங்களுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட பெருந்தோட்ட சமூகம் எமது நாட்டினதுமக்கள்தொகுதியாகும். தோட்ட மக்களுக்கு குடியுரிமை வழங்கும் பணிகளில் ரணசிங்க பிரேமதாஸபெரும்பங்காற்றினார். குடியுரிமை குறித்து பேசும்போது, காணி உரிமை இல்லாத குடியுரிமை பயனற்றது. எமது நாட்டின் பிரஜைகள் தமது சொந்தக்காணியிலும், வீட்டிலும் வாழும் உரிமை அவர்களுக்கு இருக்கின்றது. இது அவர்களது அடிப்படை உரிமை.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 351 ஆவது கட்டமாக ஸ்மார்ட் வகுப்பறைஉபகரணங்கள்மற்றும் அகராதிகள் என்பன கண்டி, கஹவடகோரலை, விவேகானந்தா கல்லூரிக்கு வழங்கி வைக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவிக்கையில், “அரசமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் அரசியல்மற்றும்சிவில்உரிமைகள் மட்டுமேஉள்ளடங்கியுள்ளன.எமது நாட்டிலும்தென்னாப்பிரிக்காவின் அரசமைப்பைப் போல் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கு மேலதிகமாக, பொருளாதாரம், சமூகம், கலாசாரம், வாழ்வாதாரம், சுகாதாரம், கல்வி மற்றும் சொந்த வீட்டுக்கான உரிமைகளையும் உள்ளடக்க வேண்டும்.

எமது நாட்டின் பெருந்தோட்டத்துறையில் அப்பாவியாக வாழ்ந்து வரும் பெருந்தோட்ட மக்களின் வாழ்வோடு விளையாடும் அரசியல் விளையாட்டுகளுக்கு இடம்கொடுக்காமல், விவசாயம் செய்யப்படாத தனியார் மற்றும் அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களை இவர்களுக்கு வழங்கி, சொந்தமாக வீடு கட்டி, அந்த காணியில் சிறிய தேயிலை தோட்டம் அமைத்து, மக்கள் சமூகத்தில் கௌரவமான வாழ்க்கையை வாழ்வதற்கான உரிமையையும், வரத்தினையும் ஐக்கிய மக்கள் சக்தி அரசில் பெற்றுத்தருவேன்.

மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான விடயங்கள் குறித்தான அம்சங்கள் அடிப்படை உரிமைகள் அத்தியாத்தில் சேர்க்கப்படும்போது, ஒவ்வொரு ஆட்சியாளரும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய அழுத்தத்தைச் சந்திப்பார். இது ஆட்சியாளர்களது பொறுப்பாகிவிடும். அடிப்படை உரிமைகள் குறித்து பேசினாலும், கொரோனா வைரஸின் போது முஸ்லிம் மக்களினது மத மற்றும் கலாச்சார உரிமைகள்மீறப்பட்டன. தகனமா? அடக்கமா? என்ற விவகாரத்தில் தவறான அறிவியல் அறிக்கைகளைக்காட்டி முஸ்லிம் சமூகத்தினர் பாராபட்சமாக தாக்கப்பட்டனர். மத, கலாசார உரிமைகளை அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் சேர்க்கப்பட்டிருந்தால் ஆட்சியாளர்களால் அவ்வாறான நடவடிக்கைகளைசெய்யமுடியாத நிலை ஏற்பட்டிருக்கும்.” –என்றார்.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
JRide - Beyond the Road
JRide Driver: Drive & Deliver
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!